பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

20 11 2024 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
தலைப்புச் செய்திகள்

1. கயானாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது இர்பான் அலி-யுடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்துகிறார்.
2. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு புள்ளி ஐந்து சதவீத பங்களிப்பை பொழுதுபோக்குத்துறை வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
3. மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை தேர்தலில் காலை 11 மணி நிலவரப்படி 18 புள்ளி ஒன்று நான்கு சதவீத வாக்குகளும், ஜார்கண்ட் மாநிலத்தில் நடைபெறும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 31 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன
4. தில்லியில் நிலவி வரும் காற்றுமாசு காரணமாக 50 சதவீதம் அரசுப்பணியாளர்கள், வீட்டில் இருந்து பணியாற்றலாம் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.
5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் மால்விகா பன்சோத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>>>

மூன்று நாள் பயணமாக கயானா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது இர்பான் அலி-யுடன் பேச்சு நடத்துகிறார்.

இந்த பேச்சுவார்த்தைக்கு பிறகு, பல்வேறு துறை சார்ந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து, இரண்டாவது **CARICOM** – இந்தியா உச்சி மாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்.

இதில் பங்கேற்கும் கரீபியன் பகுதியில் உள்ள 20 நாடுகளின் தலைவர்களுடன் திரு நரேந்திர மோடி தனித்தனியே பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

நாளை கயானா நாடாளுமன்றத்தில் பிரதமர் உரையாற்றவுள்ளார்.

பின்னர், அங்குள்ள இந்திய வம்சாவளியினருடனும் அவர் கலந்துரையாடுகிறார்.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளிநாடுவாழ் இந்தியர் தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கயானா அதிபர் டாக்டர் முகமது இர்பான் அலி

கலந்துகொண்ட நிலையில், பிரதமரின் தற்போதைய பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, பிரேசிலில் இருந்து இன்று காலை கயானா சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடியை, விமான நிலையத்தில் அந்நாட்டு அதிபர் டாக்டர் முகமது இர்பான் அலி மற்றும் அமைச்சர்களும் நேரில் வரவேற்றனர்.

<<<<<<<<>>>>>>>>

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு புள்ளி ஐந்து சதவீத பங்களிப்பை பொழுதுபோக்குத்துறை வழங்கி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாளிதழ் ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தில் 30 பில்லியன் டாலர் மதிப்புடையதாக பொழுதுபோக்குத்துறை வளர்ச்சி கண்டிருப்பதாக அமைச்சர் கூறியுள்ளார்.

பொழுதுபோக்குத்துறையில் திறமையானவர்களை ஊக்குவிப்பது, அவர்களுக்கு தேவையான கட்டமைப்பை வலுப்படுத்துவது, அவர்களது செயல் திறனை உரிய வழிகளில் வெளிக்கொணர்வது உள்ளிட்டவற்றுக்கு மத்திய அரசு முன்னுரிமை தந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 110 கோடி பேர் இணையத்தை பயன்படுத்தி வருவதாகவும், சமூக வலைதளங்கள் அவர்களது படைப்பாற்றலை ஜனநாயக மயமாக்கும் பணியை செய்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கோவாவில் நடைபெறும் 55-ஆவது சர்வதேச திரைப்பட விழா, உலக சினிமாவை சேர்ந்த படைப்பாளிகளை கௌரவிக்கும் விதமாக அமைந்திருப்பதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

55-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் இன்று தொடங்குகிறது.

மாலை ஐந்து மணிக்கு நடைபெறும் தொடக்க விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் திரு எல் முருகன், கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் மற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

தொடக்க நிகழ்வாக ஆஸ்திரேலிய இயக்குநர் மைக்கேல் கிரேஸியின் 'பெட்டர் மென்' திரைப்படம் திரையிடப்படவுள்ளது.

இம்மாதம் 28-ஆம் தேதி வரை நடைபெறும் இந்த திரைப்பட விழாவில் 81 நாடுகளைச் சேர்ந்த 180 திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

<<<<<<<<>>>>>>>>

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

காலை 11 மணி நிலவரப்படி 18 புள்ளி ஒன்று நான்கு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

அங்கு, காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை ஆறு மணிவரை நடைபெறுகிறது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் நடைபெற்று வரும் இரண்டாவது கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் காலை 11 மணி நிலவரப்படி 31 புள்ளி மூன்று ஏழு சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

காலை ஏழு மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை ஐந்து மணிவரை நடைபெறுகிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காக அம்மாநிலத்தின் 31 வாக்குச்சாவடிகளில் மாலை நான்கு மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அங்கு மாவட்ட எல்லைப்பகுதிகள் மூடப்பட்டுள்ளதாகவும், பீகார் மற்றும் மேற்குவங்க எல்லைப்பகுதிகளில் ஊடுருவலை தடுக்கும் வகையில் காவல்துறையினருடன் இணைந்து மத்திய துணை ராணுவப்படையினர் கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் Nandet மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும், கேரளா, உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தராகண்ட் மாநிலங்களில் உள்ள 15 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் தற்போது நடைபெற்று வருகிறது.

<<<<<<<<<>>>>>>>>>

கள்ளக்குறிச்சி விஷச்சாராய உயிரிழப்பு தொடர்பான வழக்கை, சிபிஐ விசாரணைக்கு மாற்றி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிபதிகள் கிருஷ்ணகுமார், பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று வெளியிட்டுள்ள உத்தரவில், இவ்வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் தமிழக காவல்துறை சிபிஐ வசம் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

ராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடம் பகுதியில் மத்திய அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து திரு அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16-ஆவது நிதி ஆணையக்குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது, ஆய்வுக்குழுவினர் பிரதமர் வீட்டுவசதித் திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடினர்.

<<<<<<<<<>>>>>>>>>

கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுருவலை தடுக்கும் வகையில் சி-விஜில் பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சி கன்னியாகுமரி கடற்கரை பகுதியில் இன்று தொடங்கியது.

இந்த ஒத்திகை இன்றும், நாளையும் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - குமார் - 34 செகண்ட்ஸ்)

<<<<<<<<<>>>>>>>>>

தில்லியில் நிலவி வரும் காற்றுமாசு காரணமாக 50 சதவீதம் அரசுப்பணியாளர்கள், வீட்டில் இருந்து பணியாற்றலாம் என்று தில்லி அரசு தெரிவித்துள்ளது.

இதனை நடைமுறைக்கு கொண்டுவருவது குறித்து இன்று பிற்பகலில் தில்லி சுற்றுச்சூழல் அமைச்சர் திரு கோபால் ராய் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தில்லியில் இன்று காலை 11 மணி நிலவரப்படி, காற்றின் தரக்குறியீடு சராசரியாக 427-ஆக பதிவானதாகவும், ஒரு சில பகுதிகளில் இந்த அளவு 450-ஐ தாண்டியிருப்பதாகவும் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

நேபாளத்தை சேர்ந்த 26 உறுப்பினர்களை கொண்ட அரசு பிரதிநிதிகள் குழு இன்று முதல் வரும் 30-ஆம் தேதிவரை புதுதில்லியில் நடைபெறும் முதலாவது சிறப்பு பயிற்சித் திட்டத்தில் பங்கேற்கிறது.

வெளியுறவு அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இப்பயிற்சித் திட்டத்தில், அந்நாட்டை சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட அரசுத்துறைகளை சேர்ந்த அதிகாரிகள் பங்கேற்பதாகவும், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் விதமாக இது செயல்படுத்தப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<<<>>>>>>>>>

இலங்கையின் நிதித்துறையை வலுப்படுத்தும் வகையில், 200 மில்லியன் டாலர் கொள்கை அடிப்படையிலான கடனுதவிக்கு ஆசிய வளர்ச்சி வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

அந்நாட்டின் பொருளாதாரத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் விதமாகவும், நிலையான வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் இந்த கடனுதவி வழங்கப்படுவதாக ஆசிய வளர்ச்சி வங்கி தெரிவித்துள்ளது.

பெரிய அளவிலான பொருளாதார செயல்பாடுகளிலும், நிதி கட்டமைப்பை மேம்படுத்துவதிலும் இலங்கை முன்னேற்றம் கண்டு வருவதாக அவ்வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து மற்றும் மால்விகா பன்சோத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

Shenzhen நகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் பி வி சிந்து, 21-17, 21-19, என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Busanan** –ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் மால்விகா பன்சோத், 20-22, 23-21, 21-16 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Line Hojmark** –ஐ தோற்கடித்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் இறுதி ஆட்டத்தில் இந்தியா – சீனாவை எதிர்கொள்கிறது.

பீகாரின் ராஜ்கீரில் இப்போட்டி மாலை மணி 4.45-க்கு தொடங்குகிறது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் மலேசியா - ஜப்பான் அணிகள் மோதுகின்றன.

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ரித்விக் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி – குஜராத் அணியையும், தெலுகு அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<<<END>>>>>>>>